# பொருளாதாரக் குற்றவாளிகளுக்கான பட்டியலில் ராஜபக்ஷர்களுடன் பந்துலவையும் சேர்க்க வேண்டும்!

## அநுர குமார திசாநாயக்க எம்.பி. நெத்தியடி!

பொருளாதாரக் குற்றவாளிகள் பட்டியலில் அமைச்சர் பந்துல குணவர்த்தனவையும் சேர்க்க வேண்டுமென மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அநுர குமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

இன்றைய நாடாளுமன்ற அமர்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷ, பசில் ராஜபக்ஷ, அஜித் நிவாட் கப்ரால், உள்ளிட்டவர்கள்தான் பொருளாதாரக் குற்றவாளிகள் என உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

தற்போது இன்னொருவரையும் இதில் சேர்க்க வேண்டும். அவர்தான் அமைச்சர் பந்துல குணவர்த்தன. ஏனெனில், இவர்தான் பொருளாதாரம் தொடர்பாக இந்த நாடாளுமன்றில் அதிகத் தடவை கதைத்துள்ளார். எனவே, தனது பெயர் இந்தப்பட்டியலில் இல்லாதமையை நினைத்து பந்துல கவலையடைகிறாரோ தெரியவில்லை.

அத்தோடு, நாடு வங்குரோத்து நிலைமைக்குச் சென்றமை தொடர்பாக ஆராய்வதற்காக நாடாளுமன்றத் தெரிவுக்குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது. ஆனால், உயர்நீதிமன்றின் தீர்ப்போடு இந்தத் தெரிவுக்குழு பயனற்றதாகிவிட்டது. 2 ▶



மாலைக்கதிர்
Maalaikkathir
சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 கார்த்திகை 01 வெள்ளிக்கிழமை 17.11.2023 கதிர் 115

யாழ்ப்பாணத்தில் இருந்து ஒரு புதிய வியாபாரக்குறி!
A new brand from Jaffna!
பூ ஆடை
Poo Aadai
ஆண், பெண் இருபாலாருக்குமான ஆடைகள்

# போதகர் ஜெரோம் பெர்னாண்டோ நாடு திரும்பும்போது கைது வேண்டாம்!

## மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவு



போதகர் ஜெரோம் பெர்னாண்டோ வெளிநாட்டில் இருந்து இலங்கை திரும்பும்போது விமான நிலையத்தில் வைத்து அவரைக்கைது செய்யவேண்டாம் என மேன்முறையீட்டு நீதிமன்றம் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு உத்தரவு ஒன்றைப் பிறப்பித்துள்ளது.

நாட்டுக்கு அவர் வந்த பின்னர் 48 மணி நேரத்திற்குள் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் டிஜிட்டல் தடயவியல் பிரிவில் முன்னிலையாகி 2 ▶

# கிரிக்கெட் தெரிவுக்குழுவின் தலைவர் விசேட புலனாய்வு பிரிவுக்கு அழைப்பு



இலங்கைக் கிரிக்கெட் தெரிவுக்குழு தலைவரான பிரமோதய விக்ரமசிங்க விசேட புலனாய்வுப் பிரிவுக்கு விசாரணைக்காக அழைக்கப்பட்டுள்ளார்.

தெரிவுக் குழுவின் தலைவர் அண்மையில் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ள விடயங்கள் தொடர்பாக விசாரணை நடத்துமாறு விளையாட்டுத் தொடர்பான குற்றங்களைத் தடுப்பதற்கான விசேட புலனாய்வுப் பிரிவினருக்கு, விளையாட்டுத் துறை அமைச்சர் அறிவித்திருந்ததை அடுத்து இந்த அழைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

இலங்கைத் தெரிவுக்குழுவின் தலைவரான பிரமோதய 2 ▶

# புலமைப் பரிசில் புள்ளிகள் வெளியிடல் நடைமுறையில் மாற்றங்கள் ஏற்பட்டன

2023 ஆம் ஆண்டுக்கான ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள் நேற்று (16) இரவு வெளியாகி இருந்தன. றறற.னழநநெவள.டம என்ற இணையத்தளத்திற்கு சென்று பெறுபேறுகளை பெற்றுக்கொள்ள முடியும் என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டு பரீட்சைக்கு 332,949 பரீட்சார்த்திகள் தோற்றியிருந்தனர், அவர்களில் 50,664 பேர் 2 ▶

# இலங்கைக் கிரிக்கட் மீதான தடை குறித்து கலந்துரையாட ஐ.சி.சி.யிடம் கோரிக்கை

## அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவிப்பு



சர்வதேச கிரிக்கட் பேரவையுடன் இலங்கைக் கிரிக்கட் மீதான தடை தொடர்பாக கலந்துரையாடுவதற்கு சந்தர்ப்பம் வழங்குமாறு கோரிக்கை விடுத்ததாக அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட அமைச்சரவை உபகுழுவினால் இந்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் இன்று நாடாளுமன்றத்தில் அறிவித்தார்.

வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தலைமையிலான அமைச்சரவை உபகுழுவை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் இந்தப் பிரிச்சினை 2 ▶

### புலமைப் பரிசில் பரீட்சையில்

# அதிகூடிய புள்ளி பெற்று 5 மாணவர்கள் சாதனை

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளுக்கு அமைய 5 மாணவர்கள் 198 என்ற அதிகூடிய புள்ளிகளைப் பெற்றுள்ளனர் என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

புலமைப் பரிசில் பரீட்சை நிறைவடைந்து ஒரு மாத காலத்துக்கு அதற்கான பெறுபேறு வெளியிடப்பட்டுள்ளது. இதன் பின்னணியில் செயற்பட்ட அனைவருக்கும் நன்றி கூற வேண்டும் என்றும் கல்வி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

பெறுபேறுகளின் அடிப்படையில் 198 புள்ளிகளை 5 மாணவர்களும், 197 புள்ளிகளை 4 மாணவர்களும், 196 புள்ளிகளை 8 மாணவர்களும் பெற்றுள்ளனர்.

கல்வி மறுசீரமைப்புக்கான அனுமதி 2 ▶

# யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை மாணவி அதிகூடிய புள்ளி பெற்று மாவட்டத்தில் சாதனை



யாழ்ப்பாணம் இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை மாணவி ஜெராட் அமல்ராஜ் வனிஷ்கா, 2023 ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 196 புள்ளியைப் பெற்று யாழ். மாவட்டத்தில் முதல் தடவையாக முதலாமிடம் பெற்று வரலாற்றில் பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளார்.

இந்தத் தகவலை யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி ஆரம்பப் பாடசாலை அதிபர் சிவந்தினி வாகீசன் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

“2023 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கு 2 ▶

# தரமற்ற எரிபொருள் இறக்குமதியானதா? நாடாளுமன்றில் இன்றையதினம் கருத்தாடல்

தரமற்ற எவ்வித எரிபொருள் இருப்புக்களையும் இலங்கையில் தரையிறங்குவதற்கு அனுமதி வழங்கப்படவில்லை என அமைச்சர் கஞ்சன விஜேசேகர உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்த கருத்துக்கு இன்று மன்றில் பதிலளிக்கும் போதே அமைச்சர் கஞ்சன விஜேசேகர மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அதன்படி, கொலன்னாவை மற்றும் திருகோணமலை எரிபொருள் சேமிப்புக் கிடங்குகளுக்கு எரிபொருளை இறக்குவதற்கு உரிய முறைப்படி அந்தந்த எரிபொருள் நிறுவனங்கள் செயற்பட்டுள்ளதாகவும் அவர் விளக்கினார்.

இலங்கைக்கு தரக்குறைவான எரிபொருள் கொண்டுவரப்பட்டுள்ளதாக பல்வேறு ஊடகங்களில் வெளியாகியுள்ள செய்திகள் அனைத்தும் பொய்யானவை எனவும், எரிபொருளின் தரத்தில் பிரச்சினை இல்லை, எதிர்க்கட்சித் தலைவர் பயன்படுத்தும் வார்த்தைகளில்தான் பிரச்சினை உள்ளது என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

அமைச்சர் கஞ்சன விஜேசேகரவின் கருத்துக்கு பின்னர் மீண்டும் கருத்து தெரிவித்த சஜித் பிரேமதாச, இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட எரிபொருளின் ஒரு பகுதி தரம் குறைந்த எரிபொருள் என நிரூபிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

எனினும், இறுதியாக தனது கருத்தை வெளிப்படுத்திய அமைச்சர், பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ஊடாகவோ அல்லது களஞ்சிய நிலையத்தின் ஊடாகவோ இலங்கைக்கு தரக்குறைவான எரிபொருள் கொண்டு வரப்படவில்லை எனத் தொடர்ந்தும் குறிப்பிட்டார்.

நாடாளுமன்ற சிறப்புரிமைகள் என்ற போர்வையில் இவ்வாறான கருத்துக்களை வெளியிடுவதை விடுத்து சந்தேகம் இருப்பின் சட்ட நடவடிக்கை எடுக்குமாறும் எதிர்க்கட்சித் தலைவரிடம் அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

அதற்குப் பதிலளித்த சஜித் பிரேமதாச, சம்பந்தப்பட்ட எரிபொருள் இருப்புக்கள் தொடர்பான ஆய்வு அறிக்கைகள் நாடாளுமன்றத்தில் ஹன்சார்ட் செய்யப்பட வேண்டும் என்றார்.

## பொருளாதாரக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனால், இந்தத் தெரிவுக்குழுவைக் கலைக்க வேண்டும் என நான் சபாநாயகரிடம் கேட்டுக் கொள்கிறேன், எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (04)

## அதிகூடிய புள்ளி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிடைக்கப் பெறும் போது, தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையின் போது மாணவர்களுக்கு ஏற்படும் தாக்கங்களைக் குறைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த மேலும் கூறியுள்ளார். (அ)

## கிரிக்கெட் தெரிவுக்குழுவின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விக்கிரமசிங்க, கடந்த 13 ஆம் திகதி வெளியிட்ட செய்திக்குறிப்பில், பல சர்ச்சைக்குரிய விடயங்கள் உள்ளடங்கியிருந்தன.

ஆட்ட நிர்ணயத்தில் ஈடுபட்டவர்கள் கிரிக்கெட் விளையாட்டை அழிக்க முயன்றதாகவும், சமூக வலைதளங்களில் பிரச்சாரம் செய்வதற்காக சிலர் பெரும் தொகையை முதலீடு செய்ததாகவும் அந்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, ஆட்ட நிர்ணயம், ஊழல், சட்டவிரோத ஆட்டத் திசைமாற்றம் மற்றும் சட்டவிரோதப் பந்தயம் தொடர்பான விடயங்கள் குறித்து தனக்கு தெரியும் என அவர் வெளியிடப்பட்டுள்ள அறிக்கை முக்கியமானது, அதிலுள்ள விடயங்கள் பாரதூரமானவை என்று விளையாட்டு அமைச்சு நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தது.

இதன்படி, விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க, அந்த அறிக்கை தொடர்பில் முறையான விசாரணையை மேற்கொள்ளுமாறு விளையாட்டுத் தொடர்பான குற்றச் செயல்களைத் தடுக்கும் விசேட புலனாய்வுப் பிரிவினருக்கு அறிவித்துள்ளார்.

இதன்படி, கிரிக்கெட் தெரிவுக்குழுவின் தலைவர் பிரமோதய விக்ரமசிங்க எதிர்வரும் நவம்பர் மாதம் 22ஆம் திகதி விளையாட்டு அந்தப் பிரிவுக்கு அழைக்கப்பட்டுள்ளார். (04)

## யாழ். இந்து மகளிர் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எமது கல்லூரியில் இருந்து 110 மாணவர்கள் தோற்றிய நிலையில் 35 மாணவர்கள் வெட்டுப்புள்ளியைத் தாண்டி சித்தி அடைந்துள்ளார்கள். அதிலும் வரலாற்றில் முதன்முதலாக யாழ்ப்பாண மாவட்டத்தில் அதிக புள்ளியைப் பெற்று எங்கள் பாடசாலை மாணவி பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளமை மகிழ்ச்சியாக இருக்கின்றது." - என்றார்.

பரீட்சையில் அதிகூடிய புள்ளியைப் பெற்ற மாணவி கருத்து தெரிவிக்கையில், தன்னைப் போன்று எதிர்காலத்தில் மாணவர்கள் அதிக புள்ளியைப் பெற்று பாடசாலைக்குப் பெருமையை சேர்க்க வேண்டும் எனவும், எதிர்காலத்தில் தான் விஞ்ஞானியாக வந்து இலங்கைக்குப் பெருமை சேர்ப்பேன் எனவும் கூறினார். (அ)

## இலங்கைக் கிரிக்கட் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பாக ஆராய்வதற்காக நியமித்திருந்தார்.

அமைச்சர்களான டிரான் அலஸ், மனுஷ நாணயக்கார மற்றும் கஞ்சன விஜேசேகர ஆகியோர் அந்தக் குழுவில் இடம்பெற்றுள்ளனர்.

ஸ்ரீலங்கா கிரிக்கட்டின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு நாடாளுமன்றத்தில் உள்ள அனைவரும் கட்சி, எதிர்க்கட்சி பேதங்களைப் புறந்தள்ள வேண்டும் எனவும் அமைச்சர் காஞ்சன விஜேசேகர இன்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார். (04)

## போதகர் ஜெரோம் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாக்குமூலம் அளிக்க வேண்டும் என நீதிமன்ற உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த போதகர் மதங்களுக்கு எதிரான சர்ச்சைக்குரிய கருத்துகளை வெளியிட்டிருந்ததனால் நாட்டில் அதிர்வலைகள் ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது

## அதிகூடிய புள்ளி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்றுள்ளனர்.

அத்துடன் புலமைப்பரிசில் பரீட்சையின் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தொடர்பிலான சிங்கள, தமிழ் மொழிமூல வெட்டுப்புள்ளிகள் வெளியிடப்பட்டுள்ளதாகவும் பரீட்சைகள் திணைக்களம் அறிவித்தது.

இதன்படி, கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி, மாத்தளை, காலி, மாத்தறை, குருநாகல் மற்றும் கேகாலை ஆகிய மாவட்டங்களுக்கான சிங்கள மொழி மூல வெட்டுப் புள்ளி 154 ஆகும்.

ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் வெட்டுப்புள்ளி 150 ஆகவும், பொலன்னறுவை, பதுளை, மொனராகலை மாவட்டங்களில் 149 ஆகவும் உள்ளது.

அம்பாறை, புத்தளம், அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் சிங்கள மொழி மூல வெட்டுப்புள்ளி 148 ஆகவும், வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களில் 145 ஆகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் தமிழ்மொழி மூல வெட்டுப்புள்ளி 145 ஆகவும் கிளிநொச்சி மாவட்டத்தில் வெட்டுப்புள்ளி 144 ஆகவும் உள்ளது.

கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி, மாத்தளை, காலி, மாத்தறை, குருநாகல் மற்றும் கேகாலை ஆகிய மாவட்டங்களுக்கான தமிழ் மொழி மூல வெட்டுப் புள்ளி 147 எனவும் பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கிடையில், மாணவர்களின் மதிப்பெண்களை மறுபரிசீலனை செய்ய வேண்டியிருந்தால், நவம்பர் 27 முதல் டிசம்பர் 4 வரை இணையவழியில் மேன்முறையீடு செய்ய முடியும் என்று திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

பெறுபேறுகளுடன் மாவட்ட அல்லது அகில இலங்கை ரீதியிலான நிலைகள் வெளியிடப்பட மாட்டாது என்றும் பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (04)

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557

விற்பனையாளர் தேவை
**நிறுவனம்:** யாழ்முற்றம்
**பால்:** இருபாலரும்
**வேலை நேரம்:** காலை 7:00 மணி – மாலை 7 மணி வரை
**சம்பளம்:** பேசித் தீர்மானிக்கப்படும்
**தொடர்புகளுக்கு:** +94 77 307 8799

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
காலைக்கதிர் TV YouTube தளம்

# மாவீரர் வார நினைவேந்தலுக்குத் தடை மானிப்பாய் பொலிசார் வழக்கு திங்களுக்கு



மாவீரர் வார நினைவேந்தலை மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் தடை செய்யக்கோரி மானிப்பாய் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு தொடர்பான கட்டளை நவம்பர் 20 ஆம் திகதி திங்கட்கிழமை வழங்கப்படவுள்ளது.

நாட்டில் பயங்கரவாத அமைப்பாகத் தடை செய்யப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் உயிரிழந்தவர்களை நினைவுகூரும் மாவீரர் நாள் நினைவேந்தல், எதிர்வரும் நவம்பர் 27ஆம் திகதி மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் வலி தென்மேற்கு பிரதேச சபை முன்னாள் தவிசாளர் மற்றும் வலி தென்மேற்கு பிரதேச சபை உறுப்பினர்களால் நடத்தப் படவிருக்கிறது என்றும், அதற்குத் தடைவிதிக்க வேண்டும் என்றும் கோரியே மல்லாகம் நீதிமன்றில் மானிப்பாய் பொலிஸார் மனுத் தாக்கல் செய்திருந்தனர்.

இது தொடர்பிலான விசாரணைகள் இன்றையதினம் தினம் மல்லாகம் நீதவான் காயத்திரி சைலவன் முன்னிலையில் நடைபெற்றன.

பொலிஸாரின் விண்ணப்பத்தை நிராகரித்த எதிர் மனுதாரர்களின் சட்டத்தரணிகள், இறந்த உறவினர்களை நினைவு கூருவது எவ்விதத்திலும் பயங்கரவாதச் செயலாகாது. பொலிஸாரின் செயற்பாடு கார்த்திகை விளக்கீட்டையும் பயங்கரவாதமாகச் சித்தரிக்கும்.

பொலிஸாரின் கட்டளை வழங்கப்பட்டால் நவம்பர் 26 ஆம் திகதி கார்த்திகை விளக்கீட்டை அனுஷ்டிப்பதில் பல்வேறு பிரச்சனைகள் ஏற்படும், என்றும் தெரிவித்தனர்.

கடந்த காலங்களில் இறந்தவர்களின் நினைவேந்தலை அரசாங்கங்கள் அனுமதித்திருந்ததையும், கடந்த காலங்களில் வடக்கு கிழக்கு நீதிமன்றங்களில் இவ்வாறு தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் நிராகரிக்கப்பட்டதையும் சுட்டிக்காட்டி மானிப்பாய் பொலிஸாரின் தடைக் கோரிக்கையை நிராகரிக்குமாறும் அவர்கள் கோரினர்.

விசாரணைகளையடுத்து விண்ணப்பம் தொடர்பான கட்டளைக்காக எதிர்வரும் நவம்பர் 20 ஆம் திகதி திங்கட்கிழமைக்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

எதிர் மனுதாரர்கள் சார்பில் சட்டத்தரணி வி.மணிவண்ணன் உள்ளிட்ட பல சட்டத்தரணிகள் ஆஜராகியிருந்தனர். (01)

## யாழ் இந்து ஆரம்ப பாடசாலையின் தரம் 5 புலமைப்பரிசில் பெறுபேறு



யாழ் இந்து ஆரம்ப பாடசாலையின் 2023 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன. 266 மாணவர்கள் பரீட்சைக்குத்தோற்றி 161 மாணவர்கள் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்று சாதனை படைத்துள்ளார்கள்.

செல்வி. ஜனார்த்தனன் அஸ்விகா அதிகூடிய புள்ளியாகிய 192 ஐப் பெற்றதோடு, செல்வி உஷானந்தன் ஆராதனா 189 புள்ளிகளையும், செல்வன் சிவசொரூபன் கார்த்திகேயன் 188 புள்ளிகளையும் பெற்றுள்ளார்கள்.

வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்ற மாணவர்கள் 60.52 வீதத்தினையும், 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள் 92.4 வீதத்தினையும், 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள் 98.12 வீதத்தினையும் பெற்றுள்ளார்கள்.

## அக்கரைப்பற்று ஆயிஷா முஸ்லிம் மகளிர் கல்லூரி மாணவி புலமைப் பரிசிலில் கல்முனை மாவட்டத்தில் முதலிடம்



(எம்.எப்.நவாஸ்)

இம்முறை வெளிவந்த புலமைப்பரிசில் முடிவின் பிகாரம் அக்கரைப்பற்று ஆயிஷா முஸ்லிம் மகளிர் கல்லூரியில் டொக்டர் முகம்மது அனஸ், ஆசிரியை சினிஸ் தம்பதியின் புதல்வி பர்ஹத் பாத்திமா 190 புள்ளிகளைப் பெற்று அக்கரைப்பற்று வலயத்திலும் கல்முனை கல்வி மாவட்டத்திலும் முதலிடம் பெற்றுள்ளார்.

பாடசாலை அதிபர் நஜீமா ஹாறுத்தீன் தலைமையில் இன்று நடைபெற்ற பாராட்டு விழாவில் வலயக்கல்விப் பணிப்பாளர் ஏ.எம்.றகுமத்துள்ளாஹ் ( நழீமி), ஆரம்பப்பிரிவின் உதவிக்கல்விப்பணிப்பாளர் எஸ்.அம்ஜத்கான், திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர் எம்.ஏ.எம்.ஹசீன், பிரதி அதிபர் அபூஅஸ்ரப், வலய தலைவர் சீ.எஸ்.முஸம்மில், வகுப்பாசிரியர் ஏ.எப்.ஜியாதா ஆகியோரோடு ஏனைய வலயக்கல்வி உத்தியோகத்தர்கள், ஏனைய பாடசாலை அதிபர்கள் ஆகியோர் கலந்துகொண்டு வாழ்த்துகளைத் தெரிவித்தனர்.



# உரிய ஆவணங்களின்றி வரும் ருவாண்டா அகதிகளை திருப்பி அனுப்பி வைக்க நாடாளுமன்றில் அவசரச் சட்டம்!

## பிரித்தானிய பிரதமர் ரிஷி சுனக் உறுதியளிப்பு



பிரித்தானியாவுக்கு உரிய ஆவணங்களின்றி வரும் ருவாண்டா அகதிகளை அந்த நாட்டுக்கே திருப்பி அனுப்பிவைக்கும் அரசின் திட்டத்தை செயல்படுத்த நாடாளுமன்றத்தில் அவசரச்சட்டம் கொண்டு வரவிருப்பதாக அந்த நாட்டுப் பிரதமர் ரிஷி சுனக் உறுதியளித்துள்ளார்.

இது குறித்து டுவிட்டர் தளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், சட்டவிரோத அகதிகளை ருவாண்டாவுக்கு திருப்பி அனுப்புவதற்கான விமானங்களை ஐரோப்பிய ஒன்றியத்தின் மனித உரிமை நீதிமன்றம் தடுத்து நிறுத்துவதை இனியும் அனுமதிக்க முடியாது. உள்நாட்டில் இது தொடர்பான சட்டத் தடைகளை நீக்குவதற்காக நாடாளுமன்றத்தில் அவசரச் சட்டம் கொண்டுவரப்படும், என்று குறிப்பிட்டுள்ளார்.

போர்மற்றும்பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்ட நாடுகளிலிருந்து வளமான வாழ்வாதாரத்துக்காக பிரிட்டனில் அடைக்கலம் தேடி ஏராளமானோர்வருவது தொடர்ந்து வருகிறது.

அவ்வாறு அடைக்கலம் தேடும் அகதிகளை பணத்துக்காக சட்டவிரோதக் கும்பல் ஆபத்தான முறையில் பிரிட்டனுக்கு கடத்தி வரும் சம்பவங்களும் அடிக்கடி நடந்து வருகின்றன.

இந்த நிலையில், தங்கள் நாட்டுக்கு உரிய ஆவணங்களின்றி அடைக்கலம் தேடி வருவோரை ருவாண்டாவுக்கு விமானம் மூலம் அனுப்பிவைக்கும் திட்டத்தை கடந்த 2022 ஆம் ஆண்டில் அப்போதைய பிரதமர் போரிஸ் ஜான்ஸன் அறிவித்தார்.

அடைக்கலம் கோரி அகதிகள் அளிக்கும் விண்ணப்பங்களை சரிபார்த்து, அவர்களுக்கு புகலிடம் அளிப்பது குறித்து பிரிட்டன் முடிவு செய்யும்வரை அவர்கள் ருவாண்டா தலைநகர் கிகாலியிலுள்ள தடுப்பு முகாமில் தங்கவைக்கப்பட்டிருப்பார்கள் எனவும், அதுவரை அவர்கள் அனைவரும் சட்டவிரோத அகதிகளாகவே கருதப்படுவர் எனவும் அவர் கூறியிருந்தார்.

சர்ச்சைக்குரிய இந்த திட்டத்தை தற்போதைய பிரதமர் ரிஷி சுனக்கின் தலைமையிலான அரசும் முன்னெடுத்துச் செல்கிறது. எனினும், அகதிகள் நல உரிமை அமைப்பாளர்கள் மட்டும் தொழிலாளர் அமைப்பினர் இந்த திட்டத்துக்கு கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.

ஐரோப்பிய ஒன்னிறத்தின் மனித உரிமை நீதிமன்றமும் அகதிகளை ஏற்றி ருவாண்டா செல்லும் விமானங்களுக்கு தடை விதித்து வருகிறது.

இந்தச் சூழலில், இது தொடர்பான வழக்கை விசாரித்து வந்த உச்சநீதிமன்றம் அரசின் சர்ச்சைக்குரிய இந்தத் திட்டம் சட்டவிரோதமானது என்று புதன்கிழமை தீர்ப்பளித்தது.

பிரிட்டனில் அடைக்கலம் தேடி வரும் அகதிகளை ருவாண்டாவுக்கு அனுப்பினால், அவர்களை அந்த நாடு பாதுகாப்பற்ற மூன்றாவது நாட்டுக்கு அனுப்பி வைக்கும் என்பதற்கான முகாந்திரம் உள்ளது என்று ஏற்கெனவே கீழமை நீதிமன்றம் கூறியதை உச்சநீதிமன்றம் ஏற்றுக்கொண்டது.

இந்தச் சூழலில், அகதிகளை ருவாண்டாவுக்கு அனுப்புவதற்கான சட்டத் தடைகளை நீக்கும் வகையிலான அவசரச் சட்டத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவதாக பிரதமர் ரிஷி சுனக் தற்போது உறுதியளித்துள்ளார்.

(04)

# தெற்கு காஸா நகரங்களிலிருந்து உடனே வெளியேறவேண்டும்! பொதுமக்களுக்கு துண்டுப்பிரசுரங்கள் மூலம் இஸ்ரேல் உத்தரவு



தெற்கு காஸாவிலுள்ள 4 நகரங்களிலிருந்து பொதுமக்கள் உடனடியாக வெளியேற வேண்டும் என்று இஸ்ரேல் உத்தரவிட்டுள்ளது.

பாதுகாப்பான பகுதியாக இஸ்ரேலால் முன்னர் அறிவிக்கப்பட்டிருந்த அந்த நகரங்களிலிருந்து பொதுமக்கள் வெளியேற்றப்படுவது, இதுவரை காஸாவின் வடக்குப் பகுதியில் நடைபெற்று வரும் கடுமையான சண்டை தெற்குப் பகுதிக்கும் பரவும் என்ற அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

காஸாவின் தெற்குப் பகுதியில் இஸ்ரேல் ராணுவம் துண்டுப் பிரசுரங்களை விமானம் மூலம் நேற்று வீசியது. அந்தப் பிரசுரங்களில், கான் யூனிஸ் நகருக்கு கிழக்கு எல்லையில் அமைந்துள்ள பனி /ஹைலா, கூஸா, அபாஸன், அல்-கராரா ஆகிய நான்கு நகரங்களில் இருப்பவர்கள் அங்கிருந்து உடனடியாக வெளியேற வேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது.

அந்த நகரங்களில் ஹமாஸ் அமைப்பினர் அல்லது அவர்களது நிலைகளுக்கு அருகே வசிப்பவர்கள், இஸ்ரேல் தாக்குதலில் உயிரிழக்கும் அபாயத்தில் உள்ளதாக அந்த துண்டுப் பிரசுரங்களில் எச்சரிக்கப்பட்டுள்ளது.

ஏற்கெனவே, ஹமாஸ் அமைப்பினருக்கு எதிரான தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக, வடக்கு காஸா பகுதியிலிருந்து தெற்குப் பகுதி நகரங்களுக்குத் தப்பிச் செல்லுமாறும், அந்தப் பகுதிகள் பாதுகாப்பானவை என்றும் இஸ்ரேல் அறிவித்திருந்தது.

அதைப் போலவே வடக்குப் பகுதிகளில் கடுமையான குண்டுவீச்சு நடத்திய இஸ்ரேல் ராணுவம், தெற்கு காஸாவில் குறிப்பிட்ட அளவிலேயே தாக்குதல் நடத்தி வந்தது.

தற்போது காஸா சிட்டி, அந்த நகரில் ஹமாஸின் தலைமையகம் அமைந்துள்ளதாக இஸ்ரேல் கூறிய அல்-ஷிஃபா மருத்துவமனை உள்ளிட்ட பகுதிகளுக்கு இஸ்ரேல் ராணுவம் முன்னேறிவிட்டது.

மேலும், வடக்கு காஸாவில் அமைந்துள்ள ஹமாஸ் அமைப்பினரின் நாடாளுமன்ற வளாகம், காவல்துறை தலைமையகம் உள்ளிட்ட முக்கிய அலுவலகங்களை இஸ்ரேல் ராணுவம் கைப்பற்றிவிட்டது.

இந்தச் சூழலில், தெற்கு காஸாவில் உள்ள 4 நகரங்களிலிருந்து பொதுமக்கள் வெளியேறவேண்டும் என்று இஸ்ரேல் தற்போது உத்தரவிட்டுள்ளதன் மூலம், போரை மேலும் விரிவுபடுத்தி காஸாவின் தெற்குப்பகுதிகளையும் இஸ்ரேல் ராணுவம் கைப்பற்றும் என்ற அச்சத்தை அந்தப் பகுதி மக்களிடையே ஏற்படுத்தியுள்ளது.

ஆக்கிரமிப்பு காஸா பகுதியில் இருந்து இஸ்ரேல் கடந்த 2005 ஆம் ஆண்டு வெளியேறியது. அதன் பிறகு அந்தப் பகுதியின் ஆட்சியைக் கைப்பற்றிய ஹமாஸ் ஆயுதக் குழுவினருக்கும், இஸ்ரேல் படையினருக்கும் இடையே தொடர்ந்து பதற்றம் நிலவிவருகிறது.

இந்தப் பதற்றம் பல முறை பெரிய அளவிலான போராக உருவெடுத்துள்ளது.

இந்தச் சூழலில், கடந்த மாதம் 7 ஆம் திகதி காஸாவிலிருந்து இஸ்ரேல் மீது சுமார் 5,000 ஏவுகணைகளை சரமாரியாக வீசிய ஹமாஸ் குழுவினர், அந்த நாட்டுக்குள் அதிரடியாக ஊடுருவி 1,200 பேரை படுகொலை செய்தனர். இதில் மிகப் பெரும்பான்மையானவர்கள் பெண்கள், குழந்தைகள், முதியவர்கள் உள்ளிட்ட பொதுமக்கள் ஆவர்.

இந்த கொடூரத் தாக்குதலைத் தொடர்ந்து, ஹமாஸ் அமைப்பினரை முற்றிலுமாக ஒழித்துக்கட்ட இஸ்ரேல் அரசு சூளுரைத்துள்ளது. அதற்காக காஸா பகுதியை ஒரு மாதத்துக்கும் மேல் முற்றுகையிட்டு மிகக் கடுமையாக குண்டு வீச்சு நடத்தி வரும் இஸ்ரேல் ராணுவம், தரைவழியாகவும் காஸாவுக்குள் நுழைந்து தாக்குதல் நடத்தி வருகிறது.

(04)

# வடக்கு மாகாணத்தில் தென்னை முக்கோண வலயம் ஒரு இலட்சம் தென்னங்கன்றுகளை வழங்கும் நிகழ்வு



வடக்கு மாகாணத்தில் தென்னை முக்கோண வலயத்தை உருவாக்குவதன் அங்குரார்ப்பண நிகழ்வு கடந்த செப்டெம்பர் 2 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்டத்தின்பளை மாதிரி தென்னை தோட்டம் பகுதியில் நடைபெற்றது.

அதன் தொடர்ச்சியாக, மேலும் ஒரு இலட்சம் தென்னங்கன்றுகளை வழங்கும் நிகழ்வு இயக்கச்சி பகுதியில் தனியார் ஒருவரின் காணியில் நடைபெற்றது.

தென்னை பயிர்ச்செய்கை சபையின் வடபிராந்திய முகாமையாளர் தே.வைகுந்தன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ், தென்னை பயிர்ச் செய்கை சபையின் தலைவர் டொக்டர். மாதவி ஹேரத், ஹோகாப் பில்சி நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் ராஜித்த காரியவசன், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. றூபவதி கேதீஸ்வரன் ஆகியோரும் பங்குபற்றியிருந்தனர்.

இத்திட்டத்தினூடாக தென்னைப் பயிர்ச்செய்கை சபை ஹோகாப் பில்சியும் இணைந்து வடமாகாணத்தில் ஒரு இலட்சம் தென்னம்பிள்ளைகளை நடுகை செய்யவுள்ளன. இதற்காக 40 ஏக்கர் காணி இனங்காணப்பட்டுள்ளது.

இதன்போது, முதற்கட்டமாக கிளிநொச்சி இயக்கச்சிப் பகுதியில் 25,000 தென்னம்பிள்ளைகள் நடுகை செய்யும் நடவடிக்கையின் கீழ் இன்றைய தினம் ஆறரை ஏக்கர் தனியார் காணியில் தென்னங்கன்றுகள் நடுகை செய்யப்பட்டு குறித்த திட்டம் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதன் போது 150 பயனாளிகளுக்கு தென்னங்கன்றுகளும் வழங்கி வைக்கப்பட்டன. (02)

# யாழ் ஒஸ்மானியா கல்லூரியில் 5 மாணவர்கள் புலமையில் சித்தி

(யாழ் பரீட் இக்பால்)

5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் யாழ் ஒஸ்மானியா கல்லூரியில் 5 மாணவர்கள் வெட்டுப் புள்ளிகளுக்கு மேலாகப் புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

எம்.ஆர். ஆதிலா அக்ஸா - 164, ஆர்.ஸஹீம் - 160, பி.ஏ. அம்றா 156, எம்.ஐ. பாத்திமா இஸ்மா - 149, எம்.ஆர். அப்துல் முஹ்ஸி - 148 புள்ளிகளைப் பெற்றுக்கொண்டுள்ளனர்.

யாழ் ஒஸ்மானியா கல்லூரியில் 5 மாணவர்கள் ஒரே தடவையில் வெட்டுப் புள்ளிகளுக்கு மேலாகப் புள்ளிகளைப் பெற்றுள்ளமை இதுவே முதல் தடவையாகும் என கல்லூரி அதிபர் என்.எம். ஷாபி தெரிவித்தார்.

# கல்முனை அல்-பஹ்றியா மகா வித்தியாலய தரம் 2 மாணவர்களின் சிறுவர் சந்தை நிகழ்வு



(எம்.எம்.றம்ஸீன்)

மாணவர்களின் கணிதபாட அறிவை மேம்படுத்தும் வகையில் கல்முனை அல் பஹ்றியா தேசியப்பாடசாலையின்தரம் இரண்டு மாணவர்களால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த சிறுவர் சந்தை, பாடசாலையின் முதல்வர் எம்.எஸ்.எம். பைசால் தலைமையில்இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்கு அதிதிகளாக கல்முனை கல்வி வலய ஆரம்ப பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் ஏ.எல்.எம். ஜஹாங்கிரும், ஆரம்பப் பிரிவு ஆசிரிய ஆலோசகர் வை.ஏ.கே.தாஸிமும் பங்கேற்றனர்.

இந்நிகழ்வில் பாடசாலையின் பிரதி அதிபர்களான எம்.ஏ.சலாம், திருமதி ஈ.றினோஸ் ஹஜ்மின், ஆரம்பப் பிரிவு பகுதி தலைவர் ஏ.ஸி.எம். நளீம், பாடசாலை ஒழுக்காற்றுக் குழுத் தலைவர் எம்.பி.எம். லாபீர் ஆகியோரோடு மாணவர்கள், பெற்றோர்கள், பாடசாலை அபிவிருத்திக் குழு உறுப்பினர்கள், பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள் மற்றும் நலன் விரும்பிகள் கலந்துகொண்டனர்.




# இலவச நீர் இணைப்புக்கான பணம் செலுத்தி வறிய குடும்பத்துக்கு உதவி



(எம்.எப்)

அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்திற்குட்பட்ட தீகவாபியில் வசிக்கும் வறிய குடும்பத்திற்கு இலவச நீர் இணைப்புக்கான பணம் செலுத்தப்பட்ட கொடுப்பனவுப் பற்றுச்சீட்டை, இன்று பிரதேச செயலகத்தில் வைத்து சமூர்த்திக் கருத்திட்ட உதவி முகாமையாளரும் ஊடகவியலாளருமான நவாஸ் வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட தொழிற்சங்க தலைவர் கபீர் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் பாயிஸ் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இதற்கான நிதியினை தனவந்தர் ஒருவர் வழங்கி வைத்தமை குறிப்பிடத்தக்கது.

# இஸ்ரேல் - ஹமாஸ் போரில் பொதுமக்கள் உயிர்ச் சேதம் இந்தியப் பிரதமர் மோடி வன்மையாகக் கண்டித்தார்!



இஸ்ரேல் - ஹமாஸ் போரை உலக நாடுகள் உற்று நோக்கிக் கொண்டிருக்கும் நிலையில், போரில் பொதுமக்கள் உயிரிழப்பு தொடர்ந்து அதிகரித்து வருவதற்கு இந்தியப் பிரதமர் மோடி கண்டனம் தெரிவித்துள்ளார்.

இரண்டாவது குளோபல் சவுத் உச்சி மாநாட்டின் தொடக்க விழாவில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி பேசுகையில், மேற்கு ஆசிய பிராந்தியத்தில் நடக்கும் நிகழ்வுகளில் இருந்து புதிய சவால்கள் உருவாகி வருவதை நாம்அனைவரும் பார்க்கிறோம். ஒக்டோபர் 7 ஆம் திகதி இஸ்ரேலில் நடந்த தீவிரவாத தாக்குதலுக்கு இந்தியா கண்டனம் தெரிவித்துள்ளது. இந்தப் பிரச்சினையில் நாங்கள் நிதானத்தையும் கடைப்பிடித்தோம்.

போர் குறித்த பேச்சுவார்த்தை மற்றும் ராஜதந்திரத்துக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளோம்.

இஸ்ரேல் - ஹமாஸ் இடையேயான மோதலில் பொதுமக்கள் உயிரிழப்பதை வன்மையாகக் கண்டிக்கிறோம். போர் குறித்து பாலஸ்தீன அதிபர் மஹ்மூத் அப்பாஸிடம் பேசினேன். இந்தியா சார்பில் அவர்களுக்கு மனிதாபிமான உதவிகளையும் அனுப்பியுள்ளோம். உலகளாவிய நலனுக்காக குளோபல் சவுத் நாடுகள் ஒன்றுபட வேண்டிய நேரம் இது, என்றார்.

பாலஸ்தீனத்துக்கு சீனா, ஈரான், சிரியா, லெபனான் முதலான நாடுகளும், இஸ்ரேலுக்கு இந்தியா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகளும் ஆதரவளித்திருக்கின்றன.

உலக நாடுகள் இந்தப் போரை உற்று நோக்கிக் கொண்டிருக்கும் நிலையில், இந்தியப் பிரதமர் மோடி, தன்னுடைய டுவிட்டர் தளத்தில், இஸ்ரேலில் பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்திய செய்தி பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது.எங்கள் பிரார்த்தனைகள் பாதிக்கப்பட்ட அப்பாவி மக்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினருக்காகவே இருக்கின்றன. இந்தக் கடினமான நேரத்தில் இஸ்ரேலின் பக்கம் நாங்கள் ஒற்றுமையாக நிற்கிறோம், என்று இஸ்ரேலுக்கு ஆதரவாகப் பதிவிட்டிருந்தார்.

அந்தத் தாக்குதல்களில் இஸ்ரேலில் ஏறத்தாழ 1,400 பேர் கொல்லப்பட்டனர். 239 பேரை காசா பகுதிக்குள் கடத்திச் சென்றனர். இதனால் இஸ்ரேல் ராணுவம் காசாவின் வட பகுதியில் வான் வழித் தாக்குதலில் ஈடுபட்டது. கடந்த 40 நாட்களுக்கும் மேலாக நடந்த தாக்குதலில் காசாவில் 11,000 க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதாகத் தரவுகள் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (04)

# சீன அதிபர் ஸி ஜின்பிங்கை ஏன் சர்வாதிகாரி என்றார் பைடன்? அமெரிக்க வெளியுறவு அமைச்சர் அண்டனி பிளிங்கன் கருத்து



அமெரிக்க அதிபர் ஜோ பைடன், சீன அதிபர் ஸி ஜின்பிங்கைச் சர்வாதிகாரி எனக் குறிப்பிட்ட விவகாரம் குறித்து அமெரிக்காவின் வெளியுறவுத் துறை அமைச்சர் அண்டனி பிளிங்கன் கருத்து வெளியிட்டுள்ளார்.

முன்னதாக ஆசியா- பசுபிக் பொருளாதார கூட்டமைப்பின் மாநாட்டையொட்டி இரு நாட்டுத் தலைவர்களும் நேருக்கு நேராகச் சந்தித்த நிகழ்வு சான் பிரான்சிஸ்கோவில் நடந்தது.

நான்கு மணி நேரம் நீடித்த சந்திப்புக்குப் பிறகு அமெரிக்கா அதிபர் ஜோ பைடன், சீன அதிபரை சர்வதிகாரி என செய்தியாளர்களிடம் பேசும்போது குறிப்பிட்டார்.

இது தொடர்பாக அண்டனி பிளிங்கன் கூறுகையில், இதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. இது ஏன் எல்லோருக்கும் புதிய செய்தியாக இருக்கிறது எனத் தெரியவில்லை. நாம் இருவிதமான அரசு அமைப்புகளைக் கொண்டிருக்கிறோம். அதிபர் எப்போதும் நேர்மையாகத்தான் பேசுவார். நமக்காகத்தான் அவர் பேசியுள்ளார்.

நேற்று நடந்த சந்திப்பில் நிகழவிருக்கும் மாற்றங்களைத்தான் கவனிக்க வேண்டும். சீனாவுடனான உறவில் நமக்குச் சில கடமைகள் உள்ளன. வேறு எந்த உறவையும் விட அதிக விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய உறவு இது. உண்மையான போட்டியும்கூட. இது மோதலாக மாறாதிருக்க நாம் முயற்சிக்க வேண்டும், எனக் குறிப்பிட்டுள்ளார். (04)






# 4 வயது மகளை அடித்துத் துன்புறுத்திய நபருக்கு 2 வருட சிறைத்-தண்டனை!

## யாழ்.ஊர்காவற்துறை நீதிமன்று உத்தரவு

யாழ்ப்பாணம் – ஊர்காவற்துறை பகுதியில் தனது 4 வயது மகளை அடித்து துன்புறுத்திய நபருக்கு 2 வருட சிறைத்தண்டனை விதித்து ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

ஊர்காவற்துறை கரம்பொன் பகுதியை சேர்ந்த வாய் பேசாத முடியாத பெண்ணை சுருவிலை சேர்ந்த நபர் ஒருவர் திருமணம் செய்துள்ளார்.

அவர்களுக்கு 4 வயதில் மகள் இருந்த நிலையில் கணவன் – மனைவிக்கு இடையில் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகளை அடுத்து மனைவி கணவனை விட்டு பிரிந்து சென்றுள்ளார்.

அந்நிலையில் கடந்த 2022 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முற்பகுதியில் மனைவி விட்டுச் சென்ற நிலையில் தன்னுடன் இருந்த மகளை மிக மோசமாக சித்திரவதை புரிந்து, அடித்துத்துன்புறுத்தி அதனை காணொளியாக சமூக வலைத்தளங்களில் சிறுமியின் தந்தை பகிர்ந்துள்ளார்.

ஊர்காவற்துறை நீதவானின் கவனத்திற்கு காணொளி சென்றதை அடுத்து, ஊர்காவற்துறை பொலிஸாரை அது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து சிறுமியை தாக்கிய நபரை கைது செய்ய நீதவான் உத்தரவிட்டு இருந்தார்.

அதனை அடுத்து விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், சிறுமியை தாக்கிய நபரை கைது செய்ததுடன், சிறுமியையும் மீட்டு இருந்தனர்.

மீட்கப்பட்ட சிறுமி வைத்திய பரிசோதனைக்கு பின்னர், சிறுவர் நன்னடத்தை பிரிவின் ஊடாக சிறுவர் காப்பகத்தில் சேர்க்கப்பட்டதுடன், சிறுமியின் தந்தை விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டு, பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

தொடர்ந்து நடைபெற்ற வழக்கு விசாரணைகளை அடுத்து நேற்றைய தினம் வியாழக்கிழமை தீர்ப்புக்காக திகதியிடப்பட்ட நிலையில், சிறுமியை தாக்கிய தந்தையை குற்றவாளியாகக் கண்ட மன்று அவருக்கு இரண்டு ஆண்டுகால சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளித்து உள்ளது.

அதேவேளை பாதிக்கப்பட்ட சிறுமி சிறுவர் காப்பக பராமரிப்பிலையே வளர்ந்து வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (01)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 17.11.2023இல் வெளியிடப்பெற்றது.